# பெயார்பஸ்ட் மொபிடெல் காப்புறுதி காப்பீடு

## 1. அறிமுகம்

வருமான இழப்பு காப்பீட்டு காப்புறுதிப் பத்திரமானது, சுகயீனத்தின் அல்லது விபத்தின் காரணமாக ஏற்பட்ட உடல் ஊனத்தினால் வருமான இழப்பிற்கு ஆளான நாரொருவர் துணை புரியும் மற்றும் தொழில் இழப்பு, எதேச்சையான மரணம் என்பற்றுக்கு பாதுகாப்பளிக்கும் உற்பத்தியொன்றாகும். முன் செலுத்திய வாடிக்கையாளர்களுக்கும், பின் செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கும் மொபிடெல் ஊடாக காப்பீடு வழங்கப்படும். முன் செலுத்திய வாடிக்கையாளர்களுக்கு நாளாந்த ரீதியிலும், பின் செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கு மாதாந்த ரீதியிலும் காப்புறுதிக் கட்டணம் கழிக்கப்படும்.

பயன்பாட்டு பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ள மாதாந்த கட்டணம், முன் செலுத்திய மற்றும் பின் செலுத்தும் வாடிக்கையாளர்களின் சார்பாக மொபிடெல் மூலம் அறவிடப்பட்டு பயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்டுக்கு செலுத்தப்படும்.

காப்புறுதிக் கட்டணம் பகுதியாக கழிக்கப்பட்டவுடன், இரூ.8,400 ஆகிய காப்பீடும் மற்றும் பயன்பாடிகளும் பயன்பாட்டு பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ளவாறு விகிதாசாரத்தில் கழிக்கப்படும்.

முழு நாட்காட்டி மாதத்தினதும் செலுத்துகையும் பூரணப்படுத்தப்பட்டவுடன், அடுத்த மாதத்திலிருந்து காப்பீடு நடைமுறையாகும்.

## 2. பயன்பாட்டு பட்டியல்

| காப்புறுதிக் கட்டண அட்டவணை | | | வருமான இழப்பு | | தொழில் இழப்பு | | ஏதேச்சை மரண பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|---|
| தினசரி கழிவு (வரிகள் நீங்கலாக) | தினசரி கழிவு (வரிகள் அடங்கலாக) | மாதாந்த கழிவு (வரிகள் அடங்கலாக) | வாராந்த பயன்பாட்டு படித்தரம் | வருடாந்த காப்பீடு | காப்பீடு | வேதன முறை இலக்கம் | இழப்பீட்டு தொகை |
| 5.00 | 6.07 | 182.08 | 8,400.00 | 35,000.00 | மாதாந்த வேதனம் அல்லது ஆகவும் கூடியது ரூ.50,000. இதில் குறைவானது | 3 மாதங்கள் | 150,000.00 |
| 4.43 | 5.38 | 161.32 | 7,000.00 | 30,000.00 | | | |
| 3.74 | 4.54 | 136.19 | 5,600.00 | 24,000.00 | | 2 மாதங்கள் | 100,000.00 |
| 3.06 | 3.71 | 111.43 | 4,200.00 | 18,000.00 | | | |
| 2.37 | 2.88 | 86.30 | 2,800.00 | 12,000.00 | | 1 மாதம் | 50,000.00 |
| 1.69 | 2.05 | 61.54 | 1,400.00 | 6,000.00 | | | |
| | | 01-50 | 1,4000.00 | 3,000.00 | இல்லை | இல்லை | இல்லை |

சேவைக் கட்டணம் உட்பட காப்புறுதித் தவணைத் தொகை (மேற்குறிப்பிடப்பட்ட சேவைக் கட்டணம் உட்பட காப்புறுதித் தவணைத் தொகைக்கு 0.3% ளுளுஊடு, 2.56% மற்றும் 18% ஏயுவு வரிகள் பொருந்தும்.)

## 3. காப்பீடு

### 3.1. வருமான இழப்பு

சுகயீனத்தினால் அல்லது விபத்தினால் ஏற்படும் உடல் ஊனத்துக்கு வாராந்த பயன்பாடு செலுத்தப்படும். காப்புறுதிப் பெறுனர் படுக்கையில் இருக்க வேண்டும். ஆதாரமாக 3.1.A இல் குறிப்பிடப்பட்டுள்ள வைத்திய ஆவணங்கள் காப்புறுதி வழங்குனருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். பயன்பாட்டு அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு ரூ.182.08/= ஆகிய மதாந்த கழிவுத் தொகை பூர்த்தியாகாதிருக்கும் போது, விகிதாசார அடிப்படையில் இழப்பீடு செலுத்தப்படும்.

3.1.A. கோரிக்கைக்கு அவசியப்படும் ஆவணங்கள்

கோரிக்கையொன்றின் போது,

- நோய் பரிசோதனை அட்டை
- கோரிக்கை படிவம் மற்றும் அடையாள நிரூபனத்தின் பிரதி.

என்பன கோரிக்கைக்கு ஆதாரமாக அத்தகைய ஊனத்தின் 90 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.1.B. காப்புறுதிப் பத்திர மேலீடு

ஊன காலத்தின் முதல் நாள் காப்புறுதி அப்புறமாக்கப்படும்.

காப்புறுதிப் பத்திரம் அமுலாகும் நாளிலிருந்து மூன்று (3) மாதத்துக்குள் முன்வைக்கப்படும் கோரிக்கைகளுக்கு 50% மேலீட்டு கழிவு பிரயோகமாகும்.03 மாதங்கள் கழிந்த பின்னர், 03 மாதத்துக்கான செலுத்துகையை பூர்த்தி செய்வதின் பேரில், காப்புறுதி பெறுனர் 100% பயன்பாடுகளுக்கு தகைமை பெறுவார்.

3.1.C. விடுகைகள்

- புத்தி சுயாதீனத்துடன் அல்லது புத்தி சுயாதீனமற்ற நிலையில் தற்கொலை முயற்சி அல்லது சுய ஊறு விளைவித்தல். சட்ட விரோத பதார்த்தங்கள், மது அல்லது போதைப் பொருளின் முறையற்ற உபயோகம், (நடை போட்டி தவிர்ந்த) எந்த வகைப் போட்டியினாலும், வான் குதித்தல், நீர் சருகல், தொழிற்சார் விளையாட்டுக்கள் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளினால் விளையும் காயம், நோய் அல்லது சுகயீனம்.
- கர்ப்பம், சத்திர சிகிச்சை மூலம் பிரசவம் உட்பட மகப் பேறு, கருக்கலைதல் மற்றும் கர்ப்பம் சம்பந்தப்பட்ட கோளாறுகளும் நிலைமைகளும், பிரசவத்துக்கு முந்திய, பிந்திய பராமரிப்பு, சத்திர சிகிச்சை, கருவி அல்லது இரசயானம் மற்றும் கருத்தடை முறைகள், மலட்டுத் தன்மை, பாலியல் செயற்பாடின்மை, பரிசோதனைகள் அல்லது சிகிச்சைகள் மற்றும் மலட்டுத் தன்மை அல்லது கருக்கட்டல் தொடர்பான சிகிச்சைகள்.

- போர் நடவடிக்கை, குற்றச் செயல் அல்லது பயங்கரவாத நடவடிக்கை, பணிப் பகிஷ்கரிப்பு, கலகம், மக்கள் குழப்பம் அல்லது கிளர்ச்சியில் நேரடிப் பங்கு, அயனாகல், எவ்வகையான அணு எரிபொருள், கழிவு அல்லது அணு ஆயுதங்களில் இருந்தும் கதிர் வீச்சு அல்லது தாக்கம் அல்லது வன்முறைச் செயற்பாடு.

- பிரதானமாக உடல், பரிசோதனைகூட, காப்புறுதி செய்யப்பட்ட சிகிச்சைகளுடன் தொடர்பற்ற கதிர் வீச்சு அல்லது கருவி பரிசோதனைகள், வழமையான உடல் பரிசோதனைகள், ஆரோக்கிய பரிசோதனைகள், வைத்திய ஆய்வுகள், கண்காணிப்பு, அன்ஜியோகிராம் அல்லாத தனிப்படுத்தல் பரிசோதனைகள் என்பவற்றுக்காக மருத்துவமனையில் தங்கியிருத்தல்.

### 3.2 தொழில் இழப்பு

3.2.A. விடயதானம்

பின்வரும் காரணங்களினால் அவருடைய / அவளுடைய தொழிலை இழந்தால், காப்புறுதிப் பெறுனர் பயன்பாடுகளுக்கு தகைமையுடையவராவார்.

I. ஆட்குறைப்பு அல்லது வேலை நீக்கம்.
II. தொழில் வழங்குனரின் சட்ட விதிகள் (உதாரணம் – ஒரு பகுதி அல்லது திணைக்களம் மூடப்படுதல்).
III. ஆரோக்கிய குறைவு அல்லது சுகயீனத்தின் காரணமாக தொழில் முடிவுறுத்தல்.
IV. பொது அதிகாரியின் செயற்பாட்டின் காரணமாக வியாபாரம் முடிவுறுத்தல்.

3.2.B. அவசியப்படும் ஆவணங்கள்

கோரிக்கையொன்றின் போது, பின்வரும் ஆவணங்கள் தொழில் வழங்குனரிடமிருந்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

I. அவருடைய / அவளுடைய தொழிலை உறுதி செய்யும் முகமாக தற்போதைய தொழில் வழங்குனரிடமிருந்து ஆவண ஆதாரம்
II. 03 மாதங்களுக்கு நிலையான அடிப்படை வேதனத்தை உறுதி செய்யும் கடந்த மூன்று மாதங்களி வேதன விபரங்கள்.
III. ஊ.சே.நி. / ஊ.பா.நி. செலுத்தல் சான்று.

அத்தகைய சம்பவத்தின் 90 நட்களுக்குள், அவர் / அவள் அவசியப்படும் எல்லா ஆவணங்களையும் சமர்ப்பித்து 7 வேலை நாட்களுக்குள் பணத் தொகையொன்றை ஒரு முறை காப்புறுதி வழங்குனர் செலுத்துவார்.

**“தொழில் இழப்பு வகை” யின் கீழ், கோரிக்கையொன்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருக்கும் பட்சத்தில், “எதேச்சை மரண பயன்பாட்டின்” கீழ் மற்றுமொறு கோரிக்கைக்கு கோரிக்கையாளர் தகைமை பெற மாட்டார்.**

3.2.C. விடுகைகள்

- ஏதும் நேர்மையீனம் அல்லது ஊழல் அல்லது செயலாற்றல் குறைபாடு, அல்லது வேலை வழங்குனரின் விதி முறைகளை அல்லது நடைமுறையில் இருக்கும் ஏதும் சட்டங்களை வன்முறையாக மீறுதல் அல்லது காப்புறுதி பெறுனருக்கு எதிராக வேலை வழங்குனரினால் ஒழுக்காற்று நடவடிக்கை என்பவற்றின் காரணமான முடிவுறுத்தல், வேலை நீக்கம், தற்காலிக இடைநிறுத்தம் அல்லது ஆட்குறைப்பு என்பவற்றின் போது, இந்த பகுதியின் கீழ் ஏதும் செலுத்துகை செய்ய கம்பெனியானது கடப்பாடு உடையதல்ல,

- அ) சுய தொழில் புரியும் நபர்கள், ஆ) சமயாசமைய, தற்காலிக, பருவ கால அல்லது எவ்வகையான ஒப்பந்த அடிப்படையிலான தொழில் சம்பந்தப்பட்ட ஏதும் கோரிக்கை அல்லது காப்புறுதி வழங்குனரின் நேரடி தொழிற் பட்டியலில் இல்லாத வேலையாள்) ஏதும் தன்னார்வ தொழிலின்மை,) காப்புறுதிப் பத்திர தொடக்கத்தின் போது அல்லது தொடங்கி மூன்று மாதங்களுக்கு தொழிலின்மை ஆகிய நிலைமைகளின் போது இக்காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் ஏதும் செலுத்துகை செய்ய கம்பெனியானது கடப்பாடு உடையதல்ல,

- தன்னார்வ அல்லது வேறு விதமான இராஜினாமா, ஓய்வு பெறுதலினால் தொழிலின்மை.

- காப்புறுதிப் பெறுனர் நன்னடத்தைக் காலத்தில் இருக்கும் போது, அக்காலத்திலோ அல்லது அதற்குப் பிறகோ தொழில் உறுதி செய்யப்படாமையினால் தொழிலின்மை.

- தொழில் வழங்குனரினால் / பொது அதிகாரியினால் நடாத்தப்படும் அல்லது நடாத்தப்படவிருக்கும் ஏதும் விசாரணையின் காரணமாக தொழிலிருந்தும் இடைநிறுத்தம்.

### 3.3 எதேச்சையான மரண பயன்பாடு

3.3.A. விடயதானம்

விபத்தொன்று இடம்பெற்று 90 நாட்களுக்குள் அவ்விபத்தினால் காப்புறுதிப் பெறுனர் மரணம் அடைந்தால், பயன்பாட்டு பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள எதேச்சையான மரண பயன்பாடு (ADB) பதிவின் போது பெயர் குறிக்கப்பட்டவருக்கு செலுத்தப்பட வேண்டும்.

3.3.B. கோரிக்கைக்கு தேவைப்படும் ஆவணங்கள்

- மரண அத்தாட்சிப் பத்திரம்.
- மரண விசாரணை அறிக்கை.
- பொலிஸ் அறிக்கை (தேவைப்படின்).

அத்தகைய சம்பவத்தின் 90 நட்களுக்குள், அவர் / அவள் அவசியப்படும் எல்லா ஆவணங்களையும் சமர்ப்பித்து 7 வேலை நாட்களுக்குள் பணத் தொகையொன்றை ஒரு முறை காப்புறுதி வழங்குனர் செலுத்துவார்.

**“எதேச்சையான மரண பயன்பாட்டு வகையின் கீழ் கோரிக்கையொன்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருக்கும் பட்சத்தில், தொழில் இழப்பு வகையின் கீழ் மற்றுமொறு கோரிக்கைக்கு கோரிக்கையாளர் தகைமை பெற மாட்டார்.**

3.3.C. விடுகைகள்

- மதுபானங்கள், மாயத் தோற்ற மருந்துகள் என்பவற்றின் அதி மிகை உட்கொள்ளல் அல்லது மது போதையில் செலுத்துவதனால் ஏற்படும் விபத்துக்கள். சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்ட மட்டத்திலும் கூடிய குருதி அற்கஹோல் மட்டத்தில் இருக்கும் போது ஏற்படும் விபத்து.

- கடற்படை அல்லது இராணுவம் அல்லது விமானப் படையின் இராணு நடவடிக்கைகளும், பயங்கரவாதிகள், கிளர்ச்சியாளர்கள் மற்றும் அத்தகையவர்களை எதிர்ப்பதற்காக இராணுவ அதிகாரிகளால் கட்டளையிடப்பட்ட ஆயுத உபயோகம் அவசியப்படும் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளலும்.

- ஸ்கூபா மூழ்குதல், மோட்டார் சைக்கிளோட்டம், பரசூட் பாய்தல், கையினால் வான் சறுக்குதல், கற் பாறை அல்லது மலை ஏறுதல் அல்லது காலினால் அன்றி எவ்வகையானதும் ஓட்டப் போட்டி, படகோட்டம், பங்கி பாய்தல், குழி தோண்டுதல் அல்லது காப்புறுதி வழங்குனரினால் எழுத்து மூலமாக உடன்படாத, தொழிற்சார் ரீதியாக எந்தவொரு விளையாட்டும் உட்பட அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாத அபாயகரமான, சாகச விளையாட்டுக்கள்.

- இயற்கை அனர்த்தங்கள் – பனிச் சரிவு, மண் சரிவு, நில நடுக்கம், வெள்ளம், சுனாமி அல்லது நிலநடுக்கத்தினால் ஏற்படும் பேரலை அல்லது எரிமலை வெடித்தல், சூறாவளி, சுழற்காற்று, புயல் என்பவை உட்பட அவற்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாதன.

- விபத்தின் காயத்தோடும் மற்றும் அல்லது அதன் விளைவான தொற்று தவிர்ந்த நச்சுத் தன்மையின் விளைவானது.

- காப்புறுதி முன்வைத்தலில் விபரிக்கப்பட்டவைக்கும் அல்லது ஆரோக்கிய வெளிப்பாட்டுக்கும் குறிப்பிடத்தக்களவு மாற்றமான தொழிலில் மரண வேளையின் போது காப்புறுதிப் பெறுனர் ஈடுபட்டிருந்தால், எவ்வித கோரிக்கை தொடர்பாகவும் காப்புறுதி வழங்குனர் பொறுப்புடையவராக மாட்டார்.

## 4. பொது காப்புறுதி நிபந்தனைகள்

4.1. பூகோள பிரதேசம்
இக்காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் வழங்கப்படும் சகல பயன்பாடுகளும், இலங்கையின் பூகோள பிரதேசத்தினுள் ஏற்பட்ட செல்வினங்களுக்கு மட்டுமே பிரயோகமாகும்.

4.2. காப்புறுதிப் பத்திர தொடக்கமும் புதிப்பித்தலும்

இக்காப்புறுதிப் பத்திரமானது, முதல் மாதம் நாளாந்த செலுத்துகையை பூரணப்படுத்திய பின்னர் உடனடியாக அடுத்த நாட்காட்டி மாதத்திலிருந்து அமுலில் இருக்கும். அதன் பின்னர், கம்பெனியினால் அறிவிக்கப்படும் அக்காலத்தில் நடைமுறையாகும் காப்புறுதிக் கட்டண விகிதத்தில் மாதாந்தம் புதுப்பிக்கப்படத் தக்கதாகும்.

4.3 கோரிக்கை வரையறைகள்

மருத்துவமனையில் தங்கியிருக்கும் முதல் நாளிரவை விடுத்து, அட்டவணை 1 இல் குறித்துரைக்கப்பட்டிருப்பது போல் காப்புறுதிக் கட்டணம் செலுத்தப்பட்டு இருப்பதன் பேரில், மருத்துவமனையில் தங்கியிருக்கும் காலத்துக்கு நாளாந்த கொடுப்பனவொன்று செலுத்தப்படும். 12 நாட்காட்டி மாதங்களுக்கான ஆகவும் கூடிய கோரத்தக்க வரையறையானது, முதலாம் அட்டவணையில் குறிபிடப்பட்டு இருக்கும் வருடாந்த வரையறையை மீறாதிருக்க வேண்டும்.

4.4 வயதெல்லை

பதிவு வயது 18 வருடங்கள் முதல் 65 வருடங்களும், முடிவுறும் வயது 70 வருடங்கள் ஆகவும் உடையவர்களையே இக்காப்புறுதிப் பத்திரம் காப்பீடு செய்யும்.

4.5 காப்புறுதிப் பத்திர மேலீடு

காப்புறுதிப் பத்திரம் அமுலாகும் திகதியிலிருந்து முதல் மூன்று (03) மாத காலத்தின் போதான கோரிக்கைகளுக்கு 50% மேலீடு பிரயோகமாகும்.

கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டால், அக்கோரிக்கையைத் தொடர்ந்து முதல் மூன்று (03) மாதங்களுக்கான கோரிக்கைகளுக்கு 50% மீள்பிரயோகமாகும். மூன்று (03) மாதங்கள் கழிந்த பின்னர், காப்புறுதிப் பெறுனர் மீண்டும் 100% பயன்பாட்டுக்கு தகைமை பெறுவார்.

4.6 காப்புறுதி கட்டணம் செலுத்தல்

காப்புறுதி பெறுனர் பகுதி பயன்பாட்டு அட்டவணைக்கு இணங்க வரிகளுடன் சேர்த்து காப்புறுதிக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். அங்கத்தினர் ஒரு மாதத்துக்கு செலுத்தாவிடில், செலுத்துகை கம்பெனிக்கு கிடைக்கப் பெற்ற பின் 30 நாட்கள் காத்திருப்பு காலம் பிரயோகமாகும்.

4.7 அறிவித்தல்

கம்பெனிக்கான எல்லா அறிவித்தல்களும் தொடர்பாடல்களும் எழுத்து மூலமாக கம்பெனியின் விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும். அவருடைய / அவளுடைய மொபிடெல் அங்கத்தினர் இலக்கதினூடாக FIL இனால் காப்புறுதிப் பெறுனர் தொடர்பு கொள்ளப்படுவார்.

4.8 மாற்றங்கள்

எழுத்து மூலமான 30 நாள் முன்னறிவித்தலை கம்பெனியின் பதிவுகளில் உள்ள காப்புறுதிப் பெறுனரின் கடைசியாக அறியப்பட்ட விலாசத்துக்கு சாதாரண தபாலில்

அனுப்புவதன் மூலம், இந்த காப்புறுதிப் பத்திரத்தின் நியதிகள், ஏற்பாடுகளை மாற்றும் உரிமையை கம்பெனி கொண்டுள்ளது.

4.9 இரத்தாக்கல்

அங்கத்தினருக்கு மற்றும் / அல்லது காப்புறுதி பெறுனருக்கு அறிவிப்பதன் மூலம், காப்புறுதிப் பத்திரமானது முழுமையாகவோ அல்லது யாரும் காப்புறுதி செய்யப்பட்டவர் தொடர்பாகவோ எந்நேரத்திலும் கம்பெனியினால் இரத்துச் செய்யப்படலாம்.

4.10 கோரிக்கை சமர்ப்பித்தல்

வெளியாகிய நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மருத்துவமனையில் தங்கியிருத்தல் கோரிக்கை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4.11 கோரிக்கை செலுத்துகை

கம்பெனி பூரண ஆவணங்களையும் பெற்று 5 வேலை நாட்களுக்குள் காப்புறுதி பெறுனரின் பெயருக்கு தகைமையான செலுத்துகை செய்யப்படும்.

4.12 அத்தாட்சிப்படுத்தல், தகவல்கள் மற்றும் சான்று

கம்பெனியின் கோரப்படும் எல்லா அத்தாட்சிப்படுத்தல்களும், தகவல்களும் மற்றும் சான்றுகளும் காப்புறுதி பெறுனரின் செலவில், கம்பெனி வேண்டும் விதத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

முன் வைக்கப்பட்ட ஏதும் கோரிக்கை முறையற்றதாக அல்லது மிகைப்படுத்தப்பட்டதாக அல்லது அதற்கு ஆதாரமாக ஏதும் போலியான கூற்றுக்கள் அல்லது பிரகடனம் செய்யப்பட்டிருந்தால், இதில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், அத்தகைய காப்புறுதி பெறுனர் தொடர்பில் காப்பீட்டை செல்லுபடியற்றதாக்கும் உரிமையை கம்பெனி உடையது.

4.13 ஆளும் சட்டம்

காப்புறுதியானது, இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சட்டத்தின் கீழ் வழங்கப்படுவதுடன் ஆளவும் படுகின்றது.

4.14 செலுத்துகை நாணயம்

காப்புறுதிப் பெறுனருக்கும், கம்பெனிக்குமான சகல செலுத்துகைகளும் இலங்கை ரூபாவிலாகும்.

5. வரைவிலக்கணங்கள்

5.1. விபத்து என்பது, அடையாளங் காணத்தக்க நேரத்திலும் இடத்திலும் வேறெந்த காரணியில் இருந்தும் சுயாதீனமானாக காயமொன்றுக்கு வழிவகுக்கும் திடீர், கருத்தொன்றிக்காத, எதிர்பாராத, வழமைக்கு மாற்றமான மற்றும் குறிப்பான சம்பவம் என அர்த்தப்படும்.

5.2. வருடாந்த வரையறை என்பது,, காப்புறுதியின் தொடக்கத்தில் இருந்து ஒரு வருடத்துக்குள் மருத்துவமனையில் தங்கியிருப்பதற்காக காப்புறுதிப் பெறுனருக்குக் கிடைக்கப் பெறும் ஆகவும் கூடிய வரையறை என அர்த்தப்படும்.

5.3. பற் சிகிச்சை என்பது, மேலதிக விசேடத்துவத்துடனும் அல்லது அல்லாமலும் ஆரம்ப B.D.S. (பற் சத்திர சிகிச்சை பட்டதாரி) பட்டதாரியினால் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை என அர்த்தப்படும்.

5.4. நோய் என்பது, வழமையான ஆரோக்கிய நிலைமையில் இருந்தும் நோயியலினால் அடையாளங் காணப்படும் மாற்றமான உடல் நிலை என அர்த்தப்படும்.

5.5. மருத்துவமனை என்பது, நோயுற்ற மற்றும் காயமுற்ற நபர்களை பராமரிப்பதற்கான மருத்துவமனை என முறையாக அமையப் பெற்றதும், சுகாதார சேவைகள் மற்றும் போஷாக்கு அமைச்சில் பதிவு செய்யப்பட்டதும், நோய் கண்டறிதலுக்கும் பிரதான சத்திர சிகிச்சைக்கும் வசதிகளைக் கொண்டதும், பதிவு செய்யப்பட்ட மற்றும் பட்டதாரி தாதிகளினால் 24 மணி நேர தாதியர் சேவை வழங்குவதுமான நிறுவனம் என அர்த்தப்படும்.

5.6. மருத்துவமனையில் தங்கியிருத்தல் என்பது, ஆரம்ப வெளிநோயாளர், நாள் சத்திர சிகிச்சை அல்லது ETU சிகிச்சையைத் தொடர்ந்து விசேட வைத்தியரொருவரின் கண்காணிப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட நோயாளியாக மருத்துமனையில் அனுமதிக்கப்படுதலும் தங்கியிருத்தலும் என அர்த்தப்படும்.

5.7. காயம் என்பது, விபத்தொன்றினால் மட்டுமே ஏற்படுத்தப்பட்ட உடற் சேதம் என அர்த்தப்படும்.

5.8. உள்வாரி நோயாளி என்பது, நோய்க்காகவும் காயமொன்றுக்காகவும் முழு நேர வைத்திய கவனிப்பையும் கண்காணிப்பையும் நாடி இரவு முழுவதும் மருத்துவமனையில் தங்கியிருக்கும் நபர் என அர்த்தப்படும்.

5.9. காப்புறுதிப் பெறுனர் என்பது, முன் சென்ற மாதத்துக்கு மொபிடெல் காப்புறுதிக் கட்டணம் செலுத்திய அங்கத்தினராவார்.

5.10. **சத்திர சிகிச்சை** என்பது, பின்வருவனவற்றில் ஏதுமொரு வைத்திய செயன்முறை – பற் சிகிச்சை அல்லாது, ஏதும் உடல் அங்கமொன்றை அல்லது பாகமொன்றை திருத்தம் செய்வதற்காக, மீளமைப்பதற்காக அல்லது அல்லது புணருத்தாரனம் செய்வதற்காக கீறுதல், வெட்டி அகற்றுதல் அல்லது மின்சார இழைய அழிப்பு என அர்த்தப்படும்.